www.StudyGuideIndia.com

5001

Register Number

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக : 4 × 2 = 8

1. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களைக் கூறுக.

2. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை ?

3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை ?

4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?

5. சிறுவர்களுக்குத் தட்டாம்பூச்சிப் பிடிக்க நேரமில்லாதது ஏன் ?

6. தேவார மூவர் யாவர் ?

[ Turn over

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : 3 × 4 = 12

7. வரத நஞ்சையப்பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார் ?

8. அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.

9. தலைவன் வரவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.

10. கண்ணகி கோவலனைக் கண்டபோது நிகழ்ந்த அற்புதம் யாது ?

11. கோலியாத்து தாவீதனைக் கண்டு வெகுண்டு உரைத்தவை யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: 3 × 4 = 12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

14. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

15. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை ?

16. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'பொறையுடைமை' என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளை இருபது வரிகளின் மிகாது எழுதுக.

19. 'காடு' என்ற தலைப்பின் கீழ் கவிஞரேறு வாணிதாசன் உரைப்பனவற்றை எழுதுக.

www.StudyGuideIndia.com

V. பின்வரும் செய்யுளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. ''நெடுந்தேர் ஊர்மதி வலவ முடிந்தன்று

அம்மநாம் முன்னிய வினையே''

அ) இக்கூற்று யாரிடம் கூறப்பட்டது ?

ஆ) இக்கூற்று யார் கூறியது ?

இ) இச்செய்யுள் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது ?

ஈ) 'வலவ' - என்பதன் பொருள் யாது ?

*அல்லது*

21. ''வாய்த்தீரே மானத்தை உயிரைக் காக்க மறப்பரிது

நும் நன்றி என்றாள்''

அ) இதனைக் கூறியவர் யார் ?

ஆ) இதனை யாரிடம் கூறினார் ?

இ) இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூலின் ஆசிரியர் யார் ?

ஈ) இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் யாது ?

VI. 22. ''விற்பெருந் தடந்தோள் வீர'' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாது எழுதி, அதன் பா வகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. ''கொன்றன்ன'' எனத் தொடங்கும் குறளையும் ''அரண்'' என முடியும் குறளையும் அடிபிறழாது எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் *இரண்டு* சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) வாழாள் ஆ) தருகுவென் இ) உணர்மின்

ஈ) புனைந்தோம் உ) ஆடுகின்ற ஊ) விடுவார்.

[ Turn over

www.StudyGuideIndia.com

25. கீழ்க்கோடிட்ட தொடர்களுள் ஏதேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) என்றடி <u>வாழ்த்துவம்</u> ஆ) <u>நெடுந்தேர்</u>

இ) <u>வையகமும் வானகமும்</u> ஈ) தழீஇ

உ) வைவேல் ஊ) புடைபுடை.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) பிழைப்பம்மா ஆ) பெருங்களிறு இ) வினைத்திட்பம்

ஈ) பொற்கொடி உ) திருவுளம் ஊ) இருளறுத்திடும்.

27. பின்வருவனவற்றிற்கு சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

குறிஞ்சித் திணை *அல்லது* பொருண்மொழிக் காஞ்சி

28. செம்பொற்கொடி அனையாள் கண்டாளைத் தான் காணான் 1 × 4 = 4

மல்லன்மா ஞாலம் இருள்ஊட்டி, மாமலை மேல்,

செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப

- இவ்வடிகளில் அமைந்த அணியைச் சுட்டுக.

***அல்லது***

''சொற்பொருட் பின்வருநிலையணி'' *அல்லது* எடுத்துக்காட்டு உவமையணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| புலவர்கள் | | இயற்றிய நூல்கள் |
|---|---|---|
| 29. இளங்கோவடிகள் | — | மணிமேகலை |
| 30. திருத்தக்க தேவர் | — | சிலப்பதிகாரம் |
| 31. நாதக் குத்தனார் | — | சீவக சிந்தாமணி |
| 32. சீத்தலைச் சாத்தனார் | — | வளையாபதி |
| | — | குண்டலகேசி. |

www.StudyGuideIndia.com

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்

அ) சிவன்

ஆ) திருமால்

இ) முருகன்.

34. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல்

அ) அகநானூறு

ஆ) ஐங்குறுநூறு

இ) புறநானூறு.

35. நற்றிணைப் பாக்களின் அடிவரையறை

அ) 4 அடி முதல் 8 அடி வரை

ஆ) 9 அடி முதல் 12 அடி வரை

இ) 13 அடி முதல் 31 அடி வரை.

36. அறத்துப்பாலில் அமைந்துள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) 70

ஆ) 38

இ) 25.

37. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) பேரகராதி

ஆ) சதுரகராதி

இ) அரும்பத அகராதி.

www.StudyGuideIndia.com

38. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள்

அ) மூன்று

ஆ) ஆறு

இ) முப்பது.

39. சுந்தர காண்டம் இராமாயணத்தில்

அ) முதற் காண்டம்

ஆ) ஐந்தாங் காண்டம்

இ) ஏழாங் காண்டம்.

40. வரி என்பது .................. வகையைச் சார்ந்தது.

அ) சந்தப்பாடல்

ஆ) இசைப்பாடல்

இ) கலிப்பாடல்.

41. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவமாலை

இ) நாலடியார்.

42. சிறிய திருவடி என்றழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

www.StudyGuideIndia.com

43. தேம்பாவனி நூலின் பாட்டுடைத் தலைவன்

அ) சூசைமாமுனிவர்

ஆ) இயேசு பெருமான்

இ) தாவீதன்.

44. புலன் என்னும் இலக்கிய வகை

அ) கலம்பகம்

ஆ) பள்ளு

இ) உலா.

45. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற நூல்

அ) பிசிராந்தையார்

ஆ) பாண்டியன் பரிசு

இ) குடும்ப விளக்கு.

46. செந்தமிழைச் செழுந் தமிழாகக் காண விரும்பியவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) கம்பதாசன்.

47. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது பெற்ற கவிஞர்

அ) அப்துல் ரகுமான்

ஆ) சுரதா

இ) தாரா பாரதி

[ Turn over

www.StudyGuideIndia.com

48. திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர்

அ) அடியார்க்கு நல்லார்

ஆ) அரும்பத உரைகாரர்

இ) பெரிய வாச்சான்பிள்ளை.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 × 2 = 4

49. ஒறுத்தாரை யொன்றாக வையாரே ................

பொறுத்தாரைப் ................ பொதிந்து.

50. துன்பம் உறவரினும் ................ துணிவாற்றி

................ பயக்கும் வினை.

www.StudyGuideIndia.com